ARTICLE 06 · கட்டுரை 06 | அற இலக்கியம்

Special Issue · Vol. 10, No. 03 (October 2026) · pp. 39–44

# நாலடியாரில் கல்வி

*Education in Naladiyar*

**முனைவர் இரா. தினேஷ் குமார்**

உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை (சுயநிதிப் பிரிவு)
உருமு தனலெட்சுமி கல்லூரி, திருச்சிராப்பள்ளி – 620 019

***Dr. R. Dineshkumar**, Assistant Professor, Department of Tamil (SFC), Urumu Dhanalakshmi College, Tiruchirappalli – 620 019*

**மின்னஞ்சல்:** anes689@gmail.com

## ஆய்வுச் சுருக்கம்

சமண முனிவர்களால் இயற்றப்பட்ட நாலடியாரில் கல்விச் செல்வம் மனித வாழ்வின் மேலான வழிகாட்டியாகப் போற்றப்படுகிறது. கல்வியின் சிறப்பை எடுத்துரைப்பதற்கென்றே இந்நூலில் தனி அதிகாரம் அமைந்துள்ளது; பிற பொருட்செல்வங்களைப் போலன்றி, கல்வி அழியாததும் எவராலும் கவர முடியாததுமான தனிச்செல்வம் என அது விளக்குகிறது. பெற்றோர் தம் மக்களுக்குத் தேடிவைக்க வேண்டிய முதன்மைச் செல்வம் கல்வியே என்றும், புற அணிகலன்கள் எவற்றையும் விஞ்சிய உண்மையான அழகைக் கல்வியே ஒருவருக்குத் தருகிறது என்றும் நாலடியார் உறுதியாக எடுத்துரைக்கிறது. இவ்வரிய கருத்துகளைத் தொகுத்து வழங்குவதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

**திறவுச்சொற்கள்:** நாலடியார்; கல்வி; கல்விச் செல்வம்; அற இலக்கியம்; சமண முனிவர்கள்

## Abstract

In Naladiyar, composed by Jain monks, the wealth of education is revered as the most sublime guide for human life. A dedicated chapter is allocated in this text specifically to extol the virtue of education, explaining it as a unique wealth that, unlike other material riches, is imperishable and cannot be stolen by anyone. Naladiyar emphatically asserts that education is the primary wealth parents must accumulate for their children, and that knowledge provides a person with true beauty far beyond any external ornaments. The objective of this study is to synthesize and present these profound concepts.

**Keywords:** Naladiyar; education; the wealth of learning; didactic literature; Jain monks

## முன்னுரை

நாலடியாரில் கல்வி சங்ககாலம் முதல் இக்காலம் வரை கல்வி இன்றியமையாத ஒன்றாக உள்ளது. இயற்கையிடமிருந்து ஒவ்வொரு நாளும் ஏதோ ஒன்றை மக்கள் பிறப்பு முதல் இறப்பு வரை கற்றுக்கொண்டே இருக்கின்றனர். கற்றதை மனதில் நிறுத்தி அசைபோடுவதே இத்தகைய கல்வி. நாலடியாரில் கல்வி எவ்வாறு எடுத்துரைக்கப்பட்டுள்ளது என்பதை ஆராய்வதே இவ்வியலின் நோக்கமாகும்.

## தொல்காப்பியர் கூறும் கல்வி

கல்வி அனைவருக்கும் தேவை. கல்விக்காகக் கடல் கடந்து போகலாம் என்று தொல்காப்பியர் குறிப்பிடுகிறார்.

> “ஓதல் பகையே தூது இவை பிரிவே”
>
> (தொல். பொருள். – 27)

“முந்நீர் வழக்கம் மகடூஉவோடு இல்லை”

(தொல். பொருள். – 37)

என்ற நூற்பாக்களும் கல்வியின் முக்கியத்துவத்தைக் கூறுகின்றன. ஓதல் என்பது கல்வியைக் குறிக்கிறது. முந்நீர் எனப்படும் கடலைக் கடந்து பொருள் ஈட்டவும் கல்வி கற்கவும் பெண்களுக்கு உரிமை மறுக்கப்பட்டிருந்ததை இந்நூற்பா விளக்கியுள்ளது.

## பள்ளி என்பதன் பொருள்

மரத்தடியில் இருந்த பள்ளிக்கூடங்கள் நாளடைவில் சிறு குடிசைகளாக மாறின. பல இடங்களில் மடங்களில் பாடசாலைகள் உருவாகின. ‘பள்ளி’ என்னும் சொல்லின் பொருள் பற்றித் தமிழ்நாடு அரசின் பொதுத் தமிழ் நூலில் குறிப்புகள் உள்ளன. உபாத்தியாயர் என்பவர் ஆசிரியர் என்றும் இந்நூல் குறிப்பிடுகிறது.

தற்காலத்தில் பெரிய கட்டடங்கள் கட்டப்பட்டு, அவற்றில் அமர்ந்து கல்வி கற்கப்படுகிறது. தற்காலத்தில் கல்வி கற்கும் இடம் மிகுந்த மாற்றம் அடைந்துள்ளது. கல்வி முறையும் மாற்றம் அடைந்துள்ளது.

## கல்வி அழகு

மனிதனின் உடல், ஆடை, கூந்தல் ஆகியவை உண்மையான அழகைத் தருவதில்லை என்பதை,

“குஞ்சி அழகும்; கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்சள் அழகும் அழகல்ல! நெஞ்சத்து
நல்லமியாம் என்னும் நடுவுநிலையால்
கல்வி அழகே அழகு”

(நா. பா. – 131)

என்று சமண முனிவர்கள் கூறியுள்ளனர்.

உடல் அழகு பார்ப்பவர்களுக்குச் சிறப்பாகத் தோன்றும். ஆனால், அவை நிலையான பயனைத் தருவதில்லை. உள்ளத்திற்கு அழகு தருவது கல்வி மட்டுமே. நம் வாழ்க்கையில் உயர்வதற்கும் நம்மை மேன்மைப்படுத்திக் கொள்வதற்கும் கல்வி தேவை என்பதை மேற்கூறிய பாடல் எடுத்துரைக்கிறது.

## குறையாத செல்வம்

வாழ்வில் எதுவும் நிலையானது இல்லை. பொருட்செல்வத்தைப் பிறருக்குக் கொடுத்தால் அது குறையும். ஆனால், கல்விச் செல்வத்தைப் பிறருக்குக் கொடுத்தால் அது வளர்ந்துகொண்டே செல்லும் என்பதை,

“இன்மை பயக்குமால் ஈயக் குறைவின்றால்
தம்மை விளக்குமால் தாமுளராக்கேடின்றால்
எம்மை உலகத்து யாம்காணோம் கல்விபோல்
மம்மர் அறுக்கும் மருந்து”

(நால. பா. – 132)

என்று கூறப்பட்டுள்ளது.

அறியாமையைப் போக்கும் நல்ல மருந்தாகக் கல்வி விளங்குகிறது. கல்வியால் பெறப்படும் புகழ் ஒருவர் இறந்த பின்னரும் பேசப்படும். கல்வி தன்னையும் உயர்த்திப் பிறரையும் உயர்த்தும் சிறப்புடையது என்பதை இப்பாடல் உணர்த்துகிறது.

## உயர்ந்த இடத்தில் வைப்பது கல்வி

பிறப்பில் உயர்வு, தாழ்வு இல்லை. அவரவர் செய்யும் செயல்களால் உயர்ந்தவர், தாழ்ந்தவர் எனப்படுகின்றனர்.

> “களர்நிலத்துப் பிறந்த உப்பினைச் சான்றோர்
> விளைநிலத்து நெல்லின் விழுமியதாகக் கொள்வர்
> கடைநிலத்தோர் ஆயினும் கற்றறிந்தோரைத்
> தலைநிலத்து வைக்கப்படும்”

(நால. பா. – 133)

என்னும் பாடலில், நன்செய் நிலத்தில் விளையும் நெல்லைவிட உவர் நிலத்தில் விளையும் உப்பைப் பெரியோர்கள் சிறப்பாகப் போற்றுவதுபோல, தாழ்ந்ததாகக் கருதப்படும் குடியில் பிறந்தவராக இருந்தாலும் கல்வியறிவால் நல்ல சிந்தனையுடையவராக விளங்குபவரை உயர்ந்த இடத்தில் வைப்பர் என்பது விளக்கப்பட்டுள்ளது.

நாம் எதைச் சிந்திக்கிறோமோ, அதற்கேற்ப நமது செயல்களும் அமையும். நமது சிந்தனையைச் செம்மைப்படுத்தி, நம்மை மற்றவர்களிடமிருந்து வேறுபடுத்திக் காட்டுவது கல்வியே ஆகும்.

## பறிக்க முடியாத கல்வி

கல்வியை யாராலும் நம்மிடமிருந்து பறிக்க இயலாது. பெரிய மனிதர்களாலும் உயர்ந்த அரசர்களாலும் கல்வியைப் பறிக்க முடியாது என்பதைச் சமண முனிவர் எடுத்துரைத்துள்ளார்.

> “வைப்புழிக் கோட்படா! வாய்த்தீயின் கேடில்லை
> மிக்க சிறப்பின் அரசர் செறின் வவ்வார்
> எச்சம் என ஒருவன் மக்களுக்குச் செய்வன
> விச்சை மற்றல்ல பிற”

(நால. பா. – 134)

பொன், வைரம், முத்து போன்ற பொருட்செல்வத்தைவிடக் கல்விச் செல்வம் உயர்ந்தது என்று சமணர்கள் குறிப்பிட்டுள்ளனர். இதனை வள்ளுவர்,

> “கற்க கசடறக் கற்பவை கற்றபின்
> நிற்க அதற்குத் தக”

(குறள் – 391)

என்று கூறுகிறார். நல்ல நூல்களைக் குற்றமறக் கற்று, அவற்றில் கூறப்பட்டுள்ள கருத்துகளுக்கு ஏற்ப வாழ வேண்டும் என்று வள்ளுவர் வலியுறுத்துகிறார். பொன், வைரம், முத்து ஆகியவை வாழ்வியல் நெறிகளைக் கற்றுத் தருவதில்லை என்பதையும் இதன் மூலம் உணரலாம்.

## பயன்படும் நூல்களைக் கற்க வேண்டும்

நல்ல நூல்களைத் தேடிப் பார்த்துப் படிக்க வேண்டும் என்பதைப் பல பாடல்கள் வாயிலாகச் சமண முனிவர் எடுத்துரைத்துள்ளார்.

“அலகுசால் கற்பின் அறிவுநூல் கல்லாது
உலகநூல் ஓதுவதெல்லாம் – கலகல
கூவும் துணையல்லால் கொண்டுதடுமாற்றம்
போலும் துணைய அறிவார் இல் துணை அறிவார் இல்”

(நால. பா. – 140)

கற்க வேண்டிய நூல்களைத் தேர்ந்தெடுத்துக் கற்க வேண்டும் என்பதை மேற்கூறிய பாடலின் மூலம் அறியலாம்.

## கல்விக்குக் கரையில்லை

கல்விக்குக் கரையில்லை. இத்தகைய கல்வியைக் கற்பதற்கான காலம் குறைவாக உள்ளது. மனிதர்களுக்கு உடலில் பல நோய்கள் ஏற்படுகின்றன. ஆகையால், சிறப்படையச் செய்யும் நூல்களைத் தேர்ந்தெடுத்துப் படிக்க வேண்டும் என்பதை நாலடியார் பாடல் எடுத்துரைக்கிறது.

“கல்வி கரையில கற்பவர் நாள்சில
மெல்ல நினைக்கின் பிணிபல – தெள்ளிதின்
ஆராய்ந்து அமைவுடைய கற்பவை நீரொழியப்
பாலுண் குருகின் தெரிந்து”

(நால. பா. – 135)

நீரில் கலந்துள்ள பாலில் இருந்து பாலை மட்டும் பிரித்துப் பருகும் அன்னப்பறவையைப் போல, நல்ல கருத்துகளை எடுத்துரைக்கும் நூல்களை ஆராய்ந்து அறிந்துகொள்ள வேண்டும். அவற்றைக் கற்று அன்னப்பறவையைப் போலச் சிறந்தவற்றைத் தேர்ந்தெடுத்து வாழ வேண்டும் என்று சமண முனிவர் ஒப்புமைப்படுத்தியுள்ளார்.

## துணையாக இருப்பது கல்வி

ஆற்றைக் கடக்கப் படகு ஓட்டுபவர் தேவைப்படுகிறார். அதுபோல வாழ்க்கையில் வெற்றி பெறக் கல்வி தேவை என்பதை,

“தோணி இயக்குவான் தொல்லை வருணத்துக்
கானின் கடைப்பட்டான் என்நிகழார் – கானாய்!
அவன்துணையா ஆறுபோயற்றே! நூல்கற்ற
மகன்துணையா நல்ல கொளல்”

(நால. பா. – 136)

என்ற பாடல் எடுத்துரைக்கிறது. அம்மா, அப்பா, நண்பர், மனைவி, கணவர், பிள்ளைகள் மற்றும் பிற உறவினர்கள் என அனைவரும் எல்லா இடங்களுக்கும் நம்முடன் வர இயலாது. ஆனால், நாம் கற்ற கல்வி எங்கு சென்றாலும் நமக்குத் துணையாக வரும். இக்கருத்துக்கு இணையாக ஔவையாரின் பாடல் ஒன்றும் உள்ளது. அது

“மன்னும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின்
மன்னனின் கற்றோன் சிறப்புடையவன் மன்னருக்குத்
தன்தேரம் அல்லால் சிறப்பில்லை – கற்றோர்க்குச்
சென்ற இடமெல்லாம் சிறப்பு” (ஔவையார், மூதுரை)

என்பதாகும். அரசன் தனது நாட்டிற்கு மட்டுமே சிறப்புடையவன். ஆனால், கற்றவருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு கிடைக்கும் என்பதை மூதுரை எடுத்துரைக்கிறது.

## பழமையான நூல்களைக் கற்க வேண்டும்

பழமையான பலவகை நூல்களைக் கற்க வேண்டும். அவ்வாறு கற்றால் தீய குணங்கள் தோன்றாமல் நுண்ணிய அறிவைப் பெறலாம். உயர்ந்த எண்ணங்களும் தோன்றும்.

“தவலரும் தொல்கேள்வி தன்மை உடையவர்
இகலிலர் எஃகுடையார் தம்முள் குழீஇ
நகலின் இனிதாயின் காண்போம் அகல்வானத்து
நகலின் இனிதாயின் காண்போம்”

(நால. பா. – 137)

தேவர்களுக்குரிய பெரும் அறிவை மனிதர்களும் கல்வி கற்றால் பெற முடியும் என்ற கருத்து மேற்கூறிய பாடலின் மூலம் விளக்கப்பட்டுள்ளது.

## கல்வி இனிது

கடல் அலைகளின் ஓசை இடைவிடாமல் கேட்டுக்கொண்டிருக்கும். நுனிக்கரும்பின் சுவை குறைவாகவும் அடிக்கரும்பின் சுவை மிகுதியாகவும் இருக்கும். அதுபோல, பெரியோரிடம் பழகும்போது தொடக்கத்தில் கடினமாகத் தோன்றினாலும், பழகப் பழக அறிவு பெருகும். அறிவு வளர்ச்சி பெறும் என்ற கருத்தை,

“கனைக்கடல் தண்சேர்ப்ப! கற்றறிந்தார் கேண்மை
நுனியின் கரும்புதின்றற்றே! – நுனிநீக்கித்
தூரின் தின்றன்ன தகைத்தாரே! பண்பிலா
ஈரமிலாளர்த் தொடர்பு”

(நால. பா. – 138)

என்ற பாடலின் மூலம் அறியலாம். இனிமையான கரும்புடன் பெரியோரின் அறிவு ஒப்புமைப்படுத்தப்பட்டுள்ளது.

## பாதிரிப்பூ

பழமையான, ஒளி பொருந்திய பாதிரிப்பூவில் புதிதாகத் தண்ணீர் பட்டால், அந்த நீரில் நறுமணம் ஏற்படும். அதுபோலக் கல்லாதவர்கள் கற்றவர்களுடன் சேர்ந்து பழகினால் நல்லறிவு பெறுவர் என்பதை,

“கல்லாரே ஆயினும் கற்றாரைச் சேர்ந்தொழுகின்
நல்லறிவு நாளும் தலைப்படுவர் தொல்சிறப்பின்
ஒண்ணிறப் பாதிரிப்பூச் சேர்தலால் புத்தோடு
தண்ணீருக்குத் தான் பயந்தாங்கு”

(நால. பா. – 139)

என்ற பாடல் எடுத்துரைக்கிறது. இப்பாடலில் பாதிரிப்பூ தண்ணீருக்கு நறுமணம் அளிப்பது உவமையாகக் கூறப்பட்டுள்ளது. தண்ணீருக்கு இயற்கையாக நறுமணம் இல்லை. ஆனால், பாதிரிப்பூவுடன் சேரும்போது அதற்கு நறுமணம் ஏற்படுகிறது. அதுபோலக் கற்றவர்களுடன் நட்புக் கொண்டு பழகினால் கல்லாதவர்களும் நல்லறிவு பெறுவர். கற்பிப்பவர்கள் இல்லாத ஊரில் இருக்கக் கூடாது என்பதை நல்லாதனார்,

“கணக்காயர் இல்லாத ஊரும் பிணக்கறுக்கும்
நன்மை பயத்தலின்”

(திரிகடுகம், பா. எண் – 10)

என்று குறிப்பிட்டுள்ளார். மேற்கூறப்பட்ட பாடல்கள் நாலடியாரில் கல்விச் செல்வத்தின் சிறப்பை ஆராய்ந்து விளக்குகின்றன.

## தொகுப்புரை

சங்கம் மருவிய காலத்தில் கற்றலுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. கல்வியின் மகத்துவத்தைப் பல்வேறு பாடல்கள் எடுத்துரைக்கின்றன. சமண முனிவர்கள் காலத்தில் நிலவிய கல்வி முறைகளிலிருந்து தற்காலக் கல்வி முறை பெரும் மாற்றம் அடைந்துள்ளது. நல்ல எண்ணங்களுக்கும் தீய எண்ணங்களுக்கும் இடையிலான வேறுபாட்டை உணர்த்துவது கல்வி. தாம் கற்ற கல்வியை எவராலும் கொள்ளையடிக்க முடியாது. உடல்நலத்துடன் இருக்கும்போதே நல்ல நூல்களைக் கற்க வேண்டும். அம்மா, அப்பா, கணவர், மனைவி மற்றும் பிற உறவினர்கள் எப்போதும் நம்முடன் வர இயலாது. ஆனால், கல்வியறிவு மட்டுமே எப்போதும் நமக்குத் துணையாக வரும். நுண்ணறிவைப் பெறுவதற்குக் கல்வி வேண்டும். பெரியோருடன் நட்புக் கொள்ள வேண்டும். கற்றவர்களுடன் பழக வேண்டும். நல்ல நூல்களைத் தேடிப் படிக்க வேண்டும். இத்தகைய வாழ்வியல் கருத்துகளை நாலடியார் நூல் எடுத்துரைக்கிறது.

## துணைநூற் பட்டியல்


1. புலியூர்க்கேசிகன், நாலடியார், ஸ்ரீ செண்பகா பதிப்பகம்,சென்னை.
2. புலியூர்க்கேசிகன், தொல்காப்பியம், சாரதா பதிப்பகம், சென்னை.
3. புலியூர்க்கேசிகன், திருக்குறள், பூம்புகார் பதிப்பகம், சென்னை.
4. இளங்குமரன், மூதுரை, தமிழ்மண் பதிப்பகம், சென்னை.
5. ந. மு. வேங்கடசாமி நாட்டார், திரிகடுகம், பாரி நிலையம், சென்னை.


## References


1. Puliyur Kesigan, *Naladiyar*. Sri Senbaga Pathippagam, Chennai.
2. Puliyur Kesigan, *Tolkappiyam*. Saradha Pathippagam, Chennai.
3. Puliyur Kesigan, *Thirukkural*. Poompuhar Pathippagam, Chennai.
4. Ilangumaran, *Moothurai*. Tamilmann Pathippagam, Chennai.
5. N. Mu. Venkatasamy Nattar, *Thirigadugam*. Pari Nilayam, Chennai.